12.12.19 பாலாஜி பி.டபிள்யு.1

அவ.எண்.33/11

குறுக்கு விசாரணைதொடர்ச்சி–

முதல் அயிட்ட ரொசாத்தாக ச்எண்.43/1 என்று காண்பித்துள்ளேன். அதனுடைய பரப்பளவு 1 ஏக்கர் 21 சென்ட் என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்துள்ள வா.த.சாஆ.4 சிட்டா எண்.43/1பி என்று உள்ளது என்றால் சரிதான். எ.4 ஆவணம் 2007ல் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது அனைத்து வருவாய்துறை ஆவணங்களும் கணிணி மயமாக்கப்பட்டுள்ள விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். காண்பிக்கப்படும் ஆவணமான கணிணி சஎண்.43/1 மற்றும் 43/1 பி க்கான சிட்டா 2015வருடத்திற்கானது அதில் உரிமையாளர் என்ற இடத்தில் யார் பெயரும் இல்லை என்றால் சரிதான். அது பி.த.சா.ஆ.1 ஆகும். இன்றைய தேதியில் கூட்டு அனுபவத்தை காட்டும் ஆவணம் உங்களிடம் இருக்கா என்றால் தெரியாது.சஎண்.43/1பி என்ற சொத்தானது என்னுடைய பாட்டானார் உறரிபுஜங்கனார் உங்களுடைய தந்தை வெங்கடசேஉஷன் ,திருமுர்த்தி ராவ், சிவராமன் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் அது குறித்து என்னுடைய தகப்பனார் என்னிடம் எதுவும் சொல்லவில்லை. 2வது அயிட்டமாக ச்எண்.237/4சி என்று சொத்து குறிப்பிட்டுள்ளீர் 9 சென்ட் இடத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்து கிரய பெற்ற சொத்தா பூர்வீக சொத்தா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எ.4ல் 2வது அியட்;ட சொத்தானது 28 சென்ட்(11.5 ஏர்ஸ்) என்று காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.அந்த சொத்தானது அனந்த பத்மநாபன் நாயுடு 1945 மற்றும் 1951 வருடத்தில் கிரயம் பெற்ற சொத்து என்றால் தெரியாது. மேலும் இந்த சொத்தானது உங்கள் பாட்டனார் எழுதி தைத்த உயிலில் படி 2 மற்றும் 3வது பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது அதனால் அந்த சொத்து உங்களுக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. 3வது அியட்டமாக

ச.எ்ண.327/6 என்று காண்பித்துள்ளீர் அதில் 6 சென்ட்டுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் நீங்கள் தாக்கல் செய்துள்ள எ.4 ல் 23 ஏர்ஸ் என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எ.4 ஆவணத்தில் அனந்தபத்மநாபன் நாயிடு சேஷாசலம் மற்றும் என்னுடைய தந்தை மற்றும் அவருடைய சகோதரர் பெயரில் கூட்டாக வருகிறது என்று சொன்னால் சரிதான். அனந்தபத்மநாபன் தற்போது உயிரோடு இல்லை. . சேஷாசலம் உயிரோடு இருக்கிறார். அனந்தபத்மநாபனின் வாரிசுகள் சேஷாசலம் ஆகியோரை இந்த வழக்கில் பார்ட்டியாக சேர்த்துள்ளீர்களா என்றால் இல்லை. 3வது அயிட்ட சொத்தை நான் பார்த்தது இல்லை. 3வது அியிட்ட சொத்தில் ஒரு வீடு உள்ளது என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. 3வது அயிட்ட சொத்தில் ஆனால் அதற்கு மதிப்பீடு போட்டு நீதிமன்றத்தில் காட்டவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்குரைஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது)